நகல்:

தமிழ் நாடு அரசு

கடிதம் எண்.9140/பணி.எம்./89.11,
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த
(பணி.எம்) துறை, புனிதஜார்ஜ்கோட்டை
சென்னை.9.

நாள் 20.11.1989.

அனுப்புநர்

திருமதி.லக்ஷ்மி பிரானேஷ், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்:

அனைத்து அரசு செயலாளர்கள், சென்னை.9
அனைத்துத்துறைத்தலைவர்கள் (மாவட்ட ஆட்சியாளர்கள், மாவட்டநீதிபதிகள் மற்றும் குற்றவியல் தலைமை நீதிபதிகள் உள்ளடங்கலாக)

ஐயா,

பொருள்:- தேர்வுகள் - சிறப்பு மற்றும் துறைத்தேர்வுகள் - தேர்வுகளில் தேர்ச்சிபெறுவதிலிருந்து விலக்கு அளிக்க விதிகளைத்தளர்த்துதல் - தொடர்பாக - அறிவுரைகள் மாற்றியமைத்தல் வெளியிடப்படுகிறது.

பார்வை:-1. அரசாணை நிலை எண்.1120, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(பணி.எம்) துறை, நாள் 30.10.1984.
2. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் கடித எண்.1854/எப்2/89 நாள் 20.9.89.

---

பார்வையில் கண்டுள்ள அரசாணையில் துறைத் மற்றும் சிறப்புத்தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்கு அளித்து தொடர்புடைய பணிவிதிகளை ஓர் அரசு அலுவலர் பொருட்டு தளர்த்த கீழ்க்கண்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்டன:-

1. சம்பந்தப்பட்ட அரசு அலுவலர் 53 வயதிற்கு குறையாதவராக இருக்கவேண்டும்.
2. இவர் தேர்வுகளில் தேர்ச்சி பெற குறைந்தது ஐந்து தடவைகளாவது முயற்சி செய்திருக்க வேண்டும். இதற்கு அத்தாட்சியாக பணிப்பதிவேட்டில் (Service Register) விபரம் இருக்கவேண்டும் அல்லது இது குறித்து தேர்விற்கான நுழைவுச்சீட்டுகளை (Examination Hall Tickets) வைத்து சம்பந்தப்பட்ட அலுவலர் அனுப்பவேண்டும்.
3. அவர் இந்தச்சலுகையை அடையத்தக்க அளவிற்கு பணிக்குறிப்புகள் மனநிறைவு அளிப்பதாக இருக்கவேண்டும்.

(2) தொடர்புடைய துறை/சிறப்புத்தேர்வினை எழுதாமலேயே ஐந்து தடவை தேர்விற்கான நுழைவுச்சீட்டுகளை (Hall Tickets) அனுப்பிவைத்து தற்போதுள்ள ஆணையின்படி சலுகையினைப்பெற ஒருவருக்கு வாய்ப்பு உள்ளது என்ற ஒரு கருத்து அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதனை அரசு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்து ஆய்வு செய்தது. செய்தி வெளியீட்டுகளில் (Tamil Nadu Public Service Commission Monthly Bulletin) 1989, நவம்பர் திங்களிலிருந்து நடைபெறவிருக்கும் சிறப்பு மற்றும் துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களின் விபரப் பட்டியலை (Detailed Results) அரசு பணியாளர் தேர்வாணையம் வெளியிடும்போது, கீழ்க்குறிப்பிட்ட தலைப்புகளில் மற்ற விண்ணப்பதாரர்களின் பதிவெண்கள் மட்டும் இனம் பிரித்து காட்டி வெளியிடப்படும் என தேர்வாணையம் தெரிவித்துள்ளது:-

1)தேர்வில் தேர்ச்சி பெறாதவர்களின் பதிவெண்கள்
( List of Register numbers of failed candidates)

2)தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டு தேர்வு எழுதாதவர்களின் பதிவெண்கள்
( List of Register numbers of Absentees)

3)தள்ளுபடி செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் பதிவெண்கள்
( List of Register numbers of Rejected cases)

எனவே பார்வை ஒன்றில் கண்ட அரசாணையின் பத்தி 2ல் உள்ள நிபந்தனைகளில் இனம்(2)-ல் உள்ள நிபந்தனையினை கீழ்க்கண்டவாறு மாற்றம் செய்து அரசு ஆணை வெளியிடுகிறது:-

"தொடர்புடைய அரசு அலுவலர் தேர்வுகளில் தேர்ச்சி பெற குறைந்தது ஐந்து தடவைகளாவது முயற்சி செய்திருக்கவேண்டும். இதற்கு அத்தாட்சியாக தொடர்புடைய துறை/சிறப்புத்தேர்வினை ஐந்து தடவைகள் தேர்வு மையத்திற்கு வந்து தேர்வுகள் எழுதியதற்கான விண்ணப்பதாரரின் அனுமதிக்குறிப்பாணையுடன்( Hall Tickets தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் வெளியிடும் மேற்படி தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் தேறாதவர்கள் ஆகிய விவரப்பட்டியல்( Detailed Results ) அடங்கிய அரசுப் பணியாளர் தேர்வாணையச் செய்தி வெளியீட்டை(Tamil Nadu Public Service Commission Bulletin)னைத்து அனுப்ப வேண்டும்."

3)மேலே பத்தி 2-ல் உள்ள மாற்றியமைக்கப்பட்ட நிபந்தனை இனிவரும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் துறை/சிறப்புத்தேர்வுகளுக்குப் பொருந்தும் என்றும் அரசு ஆணை வெளியிடுகிறது.

தங்கள் உண்மையுள்ள,
(ஒம்).....
அரசுச் செயலாளருக்காக

நகல்:- செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம, சென்னை.9
....
.....

/உண்மை நகல்/

நே.ந.ந.க 113202/89/சி24 மாநகராட்சி அலுவலகம், கோவை
நாள்:- 7.12.89.

எல்லா தலைமை துறைக்கும் மற்றும் பிரிவுத்தலைமை எழுத்தர்களது தகவலுக்கும்.

14.12.89
ஆணையாளருக்காக.

ப/சு